
பக்கங்கள் 19 + 8

# மாலை முரசு

முழக்கம்: 02 | வள்ளுவ ஆண்டு 2055 | ஆவணி 27 வியாழக்கிழமை 12.09.2024 | அதிர்வு 42


**சஜித் - த.மு.கூ. உடன்படிக்கை வரலாற்று மைல்கல்**



(விரிவான செய்தி 4ஆம் பக்கத்தில்)


‘கனடா முரசு’ இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்





# ரணிலின் வெற்றி காலத்தின் தேவை



## யாழில் அமைச்சர் டக்ளஸ் தெரிவிப்பு

(எஸ்.நிதர்ஷன்)

நாட்டினதும் தத்தமதும் எதிர் காலம் கருதியும் மக்கள் ஒவ் வொருவரும் சிந்தித்துத் தெளி வுடன் தமது வாக்குகளை ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்கு வார்களாயின் அடுத்துவரும் ஐந்து ஆண்டுகளுக்குள் சிறப் பான பொருளாதாரத்துடன் கூடிய வாழ்க்கை கட்டமைப்பு உருவாக் கிக்கொள்ள முடியும் என்று தெரி வித்த அமைச்சர் டக்ளஸ் தேவா;னந்தா, கிடைத்துள்ள இத்தகைய சந்தர்ப்பத்தை எமது மக்கள் தவறவிடமாட் டார்கள் என்றும் நம்பிக்கை வெளி யிட்டார்.

04

# சிறுபான்மைச் சமூகத்தினர் சஜித்துக்கே அதிக ஆதரவு

## கருத்துக்கணிப்பில் தகவல்

ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவுக்கு சிறுபான்மைச் சமூகத்தினர் மத்தியில் அதிகளவு ஆதரவு உள்ளமை கருத்துக்கணிப்பின் மூலம் தெரியவந்துள்ளது.

சுகாதார கொள்கைகள் நிறுவகம் மேற்கொண்ட கருத்துக்கணிப்பின் போது இது தெரியவந்துள்ளது.

இளைஞர்கள் மத்தியில் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அதிகளவு ஆதரவு காணப்படுகின்றது. கருத்துக்கணிப்பில் கலந்துகொண்டவர்களில் 53 வீத மானவர்கள் அநுரகுமாரவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, நாடளாவிய ரீதியில் இலங்கைத் தமிழர்களில் 55 வீத மானவர்களும், இந்திய வம்சாவளித் தமிழர்களில் 53 வீதமானவர்களும் சஜித் பிரேமதாஸவுக்கு

05






# யாழில் நாமலின் பரப்புரைக் கூட்டம்

(எஸ்.நிதர்ஷன்)

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ஷவின் தேர்தல் பரப்புரைக் கூட்டம் இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் பொதுஜன பெரமுனவின் யாழ்ப்பாணம் மாவட்ட அமைப்பாளர் தம்பித்துரை ரஜீவ்வின் ஏற்பாட்டில் இந்தப் பரப்புரைக் கூட்டம் இடம்பெற்றது.

கூட்டத்தில் பொதுஜன பெரமுன கட்சியின் யாழ். மாவட்ட உறுப்பினர்கள், பொதுமக்கள், இளைஞர்கள் எனப் பலரும் இதில் கலந்துகொண்டிருந்தனர்.











# ரணிலின் வெற்றி உறுதி!

## திருக்கோவில் பிரசாரத்தில் பிள்ளையான் திட்டவட்டம்




“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அடுத்த ஜனாதிபதியாவார் என்பது உறுதி செய்யப்பட்டுள்ளது. அந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி எதிர்காலத்தைக் கட்டியெழுப்பும்போது, கிழக்கு மக்களும் அதில் பங்குதாரர் ஆக வேண்டும்.”

– இவ்வாறு இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற “ரணிலால் இயலும்” வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அவரின் ஆட்சிக் காலத்தில் கிழக்கு மாகாணத்துக்கு அதிக முக்கியத்துவம் வழங்கப்பட்டுள்ளது. மாகாண சபைத் தேர்தலையும் விரைவில் நடத்தி அதிகாரப் பகிர்வுக்கான ஏற்பாடுகளைச் செய்ய வேண்டுமென அவர் வலியுறுத்தியுள்ளார்.

எனவே, யாழ்ப்பாணத்திலிருந்து சொல்வதைக் கேட்டுக்கொண்டு அழிவை நோக்கி நகர்வதா ஜனாதிபதியுடன் இணைந்து அம்பாறை மாவட்டத்தில் அமைச்சு ஒன்றைப் பெற்றுக்கொள்வதா என்பதை மக்கள் தீர்மானிக்க வேண்டும்.” – என்றார்.

# ரணிலை ஆதரிப்பதுதான் அனைவருக்கும் ஒரே வழி

## பரப்புரைக் கூட்டத்தில் தயா கமகே தெரிவிப்பு




இலங்கையில் இனியும் பொருளாதார வீழ்ச்சி ஏற்படாமல் இருக்க வேண்டுமெனில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆதரிப்பதுதான் அனைவருக்கும் உள்ள ஒரே வழி என்று முன்னாள் அமைச்சர் தயா கமகே தெரிவித்தார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற “ரணிலால் இயலும்“ வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்,

“கடந்த 15 – 20 வருடங்களில் தமிழ் மக்கள் திருக்கோவில், கல்முனை, நாவிதன்வெளி உள்ளிட்ட பல பகுதிகளில் வாழ்ந்தாலும், போதியளவு பொருளாதார வலுவை ஏற்படுத்திக் கொள்ள வாய்ப்பு கிடைக்கவில்லை. எனவே, மக்களின் வளங்களை மேம்படுத்தும் நோக்கிலேயே இன்று அனைத்து கட்சியினரும் ஒரே மேடையில் அமர்ந்திருக்கின்றோம்.

இந்தப் பகுதி மக்களின் கஷ்டங்களை எடுத்துக்காட்டி ஜனாதிபதியின் ஊடாக இப்பகுதியின் அபிவிருத்தியை மேம்படுத்தும் நோக்கிலேயே இன்று இங்கு கூட்டத்தை ஏற்படுத்தினோம். இந்தப் பகுதி மக்கள் நாட்டின் நெல் உற்பத்தியில் பெருமளவான பங்களிப்பை வழங்குகின்றார்கள். திருகோணமலையில் அமைக்கப்படும் தொழில் வலயத்தை அம்பாறை வரையில் விரிவுபடுத்துவதாக ஜனாதிபதி உறுதியளித்திருக்கின்றார்.

எதிர்த்தரப்புகளில் இருந்த மக்கள் பிரதிநிதிகளும் ஜனாதிபதியின் வெற்றிக்காக ஒன்றுபட்டிருப்பதால் அபிவிருத்திச் செயற்பாடுகளையும் ஒன்றுமையாக முன்னெடுக்க முடியும். எனவே, இரு வருடங்களுக்கு மக்கள் எதிர்கொண்ட கஷ்டங்கள் இனியும் வரக்கூடாது என்றால் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை ஆட்சியில் அமர்த்த வேண்டியது அவசியமாகவுள்ளது.” – என்றார்.

# சஜித் - த.மு.கூ. உடன்படிக்கை வரலாற்று மைல்கல்!

## மனோ கணேசன் எம்.பி. சுட்டிக்காட்டு



"சஜித் - த.மு.கூ. புரிந்துணர்வு ஒப்பந்தம், மலையக வரலாற்றில், ஜனாதிபதியாகும் வாய்ப்புள்ள இலங்கையின் பெரும் கட்சி தலைவர் ஒருவருடன் கையெழுத்திட்டு செய்து கொள்ளப்பட்டுள்ள முதல் ஒப்பந்தம் ஆகும். ஈழத்தமிழ் உடன் பிறப்புகள் தொடர்பில் செய்யப்பட்ட பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்களுக்கு சமனான ஒப்பந்தம் இதுவாகும். ஆகவேதான், தமிழ் முற்போக்குக் கூட்டணியின் மலையக சாசனத்தை அடிப்படையாகக் கொண்ட சஜித் - த.மு.கூ. புரிந்துணர்வு உடன்படிக்கை, மலையக வரலாற்றில் ஒரு மைல் கல்."

- இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவர் மனோ கணேசன் எம்.பி. தெரிவித்தார்.

நுவரெலியாவில் இன்று நடைபெற்ற மலையக சாசனம் மற்றும் சஜித் - த.மு.கூ. புரிந்துணர்வு உடன்படிக்கை வெளியீட்டு விழாவில் கூட்டணி தலைவர் மனோ கணேசன், பிரதித் தலைவர்களான பழனி திகாம்பரம், வேலுசாமி இராதாகிருஷ்ணன், சிவில் சமூகப் பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டார்கள். இதில் மனோ எம்.பி. மேலும் கூறுகையில்,

"சஜித் மீது எனக்கு நம்பிக்கை இருக்கின்றது. அவருக்கு என் மீது நம்பிக்கை உண்டு. அதேபோல் திகா, ராதா ஆகியோருக்கும் அந்தப் பரஸ்பர நம்பிக்கைகள் உள்ளன.

இருந்தாலும் அரசியல் என்பது சமூகப் பொறுப்பு கொண்டது. ஆகவே, தனிப்பட்ட நம்பிக்கைகளுக்கு அப்பால் சென்று நாம் புரிந்துணர்வு உடன்படிக்கை செய்து கொண்டோம்.

இதில் சஜித் பிரேமதாஸ, நான், இராதாகிருஷ்ணன், திகாம்பரம், உதயகுமார் ஆகியோர் கையெழுத்திட்டுள்ளோம்.

எமது பரஸ்பர கையெழுத்துக்கள் மூலம் இந்த ஆவணம் அதிகாரபூர்வ அடையாளம் பெறுகின்றது.

இந்த ஆவணம் இன்று இங்கே உங்களுக்கு வழங்கப்படுகின்றது. இதன் மூலம் இது பகிரங்க ஆவணம் ஆகின்றது.

இலங்கை வரலாற்றில் ஈழத்தமிழ் உடன்பிறப்புகள் தொடர்பில் பண்டா - செல்வா, டட்லி - செல்வா ஒப்பந்தங்கள் கையெழுத்தாகின.

எம்மை கலந்தாலோசிக்காமலேயே இலங்கை - இந்திய அரசுகள் செய்து கொண்ட ஒப்பந்தம்தான், நமது மக்களை மந்தைகள் போல் பிரித்து கொண்ட சிறிமா - சாஸ்திரி ஒப்பந்தம் ஆகும்.

மலையக வரலாற்றில், ஜனாதிபதியாகும் வாய்ப்புள்ள இலங்கையின் பெரும் கட்சித் தலைவர் ஒருவருடன் நாம் செய்த முதல் கையெழுத்து ஒப்பந்தம் இதுவாகும். ஆகவே, இது ஒரு வரலாற்று மைல் கல் ஆகும்.

இதிலே, வரலாறு முழுக்க இலங்கை நாட்டுக்கு மலையக மக்கள் வழங்கிய பங்களிப்பு அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

குடியுரிமை, வாக்குரிமை பறிப்புகள் காரணமாக நமது வளர்ச்சி ஏனைய சமூகங்களுடன் ஒப்பிடும்போது குறை வளர்ச்சி கண்டுள்ளது ஏற்றப்பட்டுள்ளது.

ஆகவே, விசேட குறைதீர் சட்ட ஏற்பாடுகள் எமக்கு அவசியம் என்பதை ஏற்று உடன்பாடு காணப்பட்டுள்ளது.

எமது வாழ்வாதாரக் காணி உரிமை, வீட்டு காணி உரிமை, கல்வி உரிமை, சுகாதார உரிமை ஆகியவை தொடர்பில் உடன்பாடு காணப்பட்டுள்ளது. .

விஞ்ஞானம், கணிதம், ஆங்கிலம், தொழில்நுட்பப் பாடங்களைத் தமிழில் கற்பிக்கும் விசேட ஆசிரியர் பயிற்சி கலாசாலை ஒன்றை ஸ்தாபிக்க உடன்பாடு காணப்பட்டுள்ளது. .

எமது இளம் பெண்களுக்கான விசேட தாதியர் பயிற்சி கல்லூரி ஒன்றை ஸ்தாபிக்கவும் உடன்பாடு காணப்பட்டுள்ளது.

சஜித் ஆட்சி அமைந்தவுடன் அமைக்கப்படும் மலையக மக்கள் தொடர்பான ஜனாதிபதி செயலணிக்கு இந்தச் சஜித் - த.மு.கூ. புரிந்துணர்வு உடன்படிக்கையே அடிப்படையாக அமையும்."

- என்றுள்ளது.

### ரணிலின் வெற்றி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணத்திலுள்ள கட்சியின் தலைமை அலுவலகத்தில் இன்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது இவ்வாறு தெரிவித்த அமைச்சர் மேலும் கூறுகையில்,

"ரணில் விக்கிரமசிங்கவின் அனுபவம், அவருக்குள்ள சர்வதேச நாடுகளுடனான உறவு மற்றும் சவால்களை எதிர்கொள்ளும் வல்லமை ஆகியவற்றைக் கொண்டு அவரே தொடர்ந்தும் இந்த நாட்டை வழிநடத்த வேண்டும் என்பதே நாட்டிலுள்ள அநேகரது விருப்பாக உள்ளது.

அதேபோன்று ஒவ்வொரு வீட்டிலும் இன்று எரிவாயு அத்தியாவசியமான பொருளாக இருக்கின்றது. அதேபோலத்தான் இன்றைய நாட்டின் சூழ்நிலைக்கும் எரிவாயு சிலிண்டர் சின்னத்தில் போட்டியிடும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றி அவசியமாக இருக்கின்றது.

எனவே, வரவுள்ள 21 ஆம் திகதி நடைபெறவுள்ள ஜனாதிபதித் தேர்தலில் ஒவ்வொரு மக்களும் ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதி செய்யும் வகையில் அவரது சின்னமான எரிவாயு சிலிண்டர் சின்னத்துக்கு வாக்களிப்பது அவசியமாகும். இதை நான் வெறும் வாக்குகளைப் பெறுவதற்காகக் கூறவில்லை.

உங்கள் ஒவ்வொருவரதும் எதிர்காலத்தை மட்டுமல்லாது நாட்டையும் ஒளிமயமாக்கும் வேலைத்திட்டங்களை முன்னெடுத்து வெற்றிகொள்ள வைக்கும் ஆளுமை ரணிலிடமே இருக்கின்றது.

கடந்தகால வரலாற்றை எடுத்துக் கொண்டால் ஆரம்பதிலிருந்து ஈ.பி.டி.பி. சரியான வழிகாட்டலைச் செய்து வந்துள்ளது.

எமது கொள்கையும் வழிமுறையும் சரியானதாக இருப்பதைக் கண்டு அது தான் வெற்றியடையப் போகின்றது என்ற உண்மையை உணர்ந்த சக தமிழ்க் கட்சிகளும் குழுக்களும் அச்சம் கொண்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு என்ற ஒன்றைக் கட்டமைத்து அரசியல் செய்தார்கள்.

ஆனால், சக தமிழ் கட்சிகளிடம் நிலையான கொள்கை ரீதியாக எந்தவொரு வேலைத்திட்டமோ, அதற்கான பொறிமுறையோ இருக்கவில்லை. அது தொடர்பாக அக்கறையும் அவர்கள் கொண்டிருக்கவில்லை.

இதனிடையே கடந்த 10 ஆம் திகதி கிளிநொச்சியில் வரலாறு காணாத வகையில் மக்கள் திரட்சியை ஈ.பி.டி.பி. செய்து காட்டியுள்ளது. இது பலருக்கு வயிற்றில் புளியைக் கரைக்க ஆரம்பித்துவிட்டது. இதனால் எம் மீது சேறுபூசல்களையும் அவதூறுகளையும் செய்ய முயற்சிக்கத் தொடங்கிவிட்டார்கள்.

ஆனால், ஈ.பி.டி.பியினராகிய நாம் சரியான வேலைத்திட்டங்களையும் கொள்கைகளையும் வைத்திருந்தோம். இதனால்தான் எம்மை மளுங்கடிப்பதற்காகப் பல்வேறு சேறுபூசல்களை மேற்கொண்டு வந்தார்கள். எமது கொள்கைளும் வழிநடத்தலும் சரியானதாக இருந்து வருகின்றமையால்தான் இம்முறை ரணிலுக்கு வாக்களிக்குமாறு மக்களிடம் குறிப்பாகத் தமிழ் மக்களிடம் நான் அறைகூவல் விடுக்கின்றேன்.

அதுமட்டுமல்லாது ரணிலின் வெற்றியினூடாகத்தான் மக்களின் அபிவிருத்திக்கோ, அன்றாடப் பிரச்சினைகளுக்கோ, அரசியல் உரிமை சார் பிரச்சினைகளுக்கோ தீர்வை எட்ட முடியும். இதுவே உண்மையும் கூட." - என்றார்.



# நல்லை ஆதீன குரு முதல்வரைச் சந்தித்த நாமல்

(எஸ்.நிதர்ஷன்)

வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் சார்பில் போட்டியிடும் வேட்பாளர் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ தேர்தல் பிரசார நடவடிக்கைக்காக யாழ்ப்பாணத்துக்கு இன்று வருகை தந்த நிலையில் நல்லை ஆதீனத்துக்கும் விஜயம் செய்தார்.

நல்லை ஆதீன குரு முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாச்சாரியார் சுவாமிகளைச் சந்தித்த நாமல் ராஜபக்ஷ, அவரைப் பொன்னாடை போர்த்துக் கௌரவித்தார்.

இந்தச் சந்திப்பில் பல்வேறு விடயங்கள் கலந்துரையாடப்பட்டநிலையில் நல்லை ஆதீன குரு முதல்வரால் நாமல் ராஜபக்ஷவுக்கு நினைவாக நந்திக் கொடி வழங்கப்பட்டது.




**சிறுபான்மை...**

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை, முஸ்லிம்களில் 71 வீதமானவர்கள் சஜித் பிரேமதாஸவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

60 வயதுக்கும் மேற்பட்ட வாக்காளர்களில் 43 வீதமானவர்கள் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவை வெளியிட்டுள்ளனர்.

வடக்கு, கிழக்கு தவிர ஏனைய மாகாணங்களில் தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க முன்னிலையில் காணப்படுகின்றார்.

# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்



259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## தேர்தல் முடிந்த பின்....!

நடந்து முடிந்த எட்டு ஜனாதிபதி தேர்தலோடும் ஒப்பிடுகையில் இந்த ஒன்பதாவது தேர்தல் முற்றிலும் வித்தியாசமானது என்பது பல தரப்பட்ட தளங்கள், நோக்குகளில் இருந்து விரிவாக பார்க்கப்பட்டு வருகின்றது.

மும்முனைப் போட்டி மிகத் தீவிரமாக உள்ளது. வெற்றி யாருக்கு என்பது ஊகிக்கப்பட முடியாத - எதிர்வு கூற இயலாத - விவகாரமாக இருக்கின்றது. மூன்று தரப்புகளுமே வெற்றி தத்தமக்கே என இப்போதே உறுதியுடன் பீற்றிக்கொள்ளும் நிலைமை நீடிக்கின்றது.

தேர்தல் முடிவு மிக நெருக்கமானதாக இருக்கும். பரபரப்பும் ஏட்டிக்குப் போட்டியும் மிகுந்ததாக அமையும். சில சமயங்களில் வெற்றிக்கான வித்தியாசம் அற்ப சொற்ப வாக்குகளாக அமையும் ஆபத்தும் உண்டு.

ஆகையினால் தேர்தலில் இறுதிக் கட்டத்தில் - வாக்களிப்பின் பின்னர் - வாக்கு எண்ணிக்கை நடக்கும் போதும், முடிவுகள் வெளியாகும் போதும் - ஒரு பக்கத்தில் வெற்றிக் களிப்பும் மற்றைய இரு பக்கங்களிலும் தோல்வியின் அதிருப்தியும், சீற்றமும், எரிச்சலுமாக கள நிலைமை வன்முறைகளுக்கான சூழலை உருவாக்கி நிற்கும் என அஞ்சப்படுகிறது.

கடும் போட்டி, தீவிர தேர்தல் பிரச்சாரங்கள், மும்முரமான ஆதரவு கூட்டங்கள் என்று தேர்தல் களேபரத்தில் நாடு இரண்டுபட்டாலும், இன்று வரை - இந்தக் கணம் வரை - தேர்தல் வன்முறைகள் பெரிதாக இடம் பெறவில்லை. நிலைமை திருப்தி தரும் விதத்தில் சுமுகமாக, கட்டுக்குள் உள்ளது. தேர்தல் விதிமுறை மீறல்கள் பற்றிய குற்றச்சாட்டுகள் எகிறினாலும் ஜனநாயகப் பண்புகள் ஓரளவு பேணப்படுகின்றன.

ஆயினும், தேர்தல் வாக்களிப்புக்குப் பின்னர் இந்த நிலைமை - அமைதிச் சூழல் - நீடிக்குமா என்ற சந்தேகம் பொதுவாக எல்லோர் மனதிலும் உள்ளது.

தேர்தல் கால வன்மமும், முரண்பாடும் வாக்குக் கணக்கெடுப்பின்போதும் பின்னரும் பீறிட்டு வெளிப்பட்டு பெரும் வன்முறையாக வெடிக்கும் ஆபத்து உண்டு என்று நேரத்துடன் எச்சரிக்கப்படுகின்றது.

அதுவும் இம்முறை பெரும்பாலும் எந்த வேட்பாளரும் தனித்து ஐம்பது வீத வாக்குகளைப் பெறுவதற்கான சூழ்நிலை இல்லை என்பதால் இரண்டாம் சுற்று வாக்கு எண்ணிக்கைக்கு நாடு போகும் சமயத்தில் பெரும் களேபரங்கள், குழப்பங்கள், வன்முறைகள் வெடிக்கும் வாய்ப்புகள் உண்டு.

சில சமயங்களில் முதல் சுற்று வாக்கு எண்ணிக்கையில் முதலாவதாக வரும் வேட்பாளர் இரண்டாம் சுற்றில் பின்னடைவு கண்டால் நிலைமை மோசமாவதற்கு அதிக சந்தர்ப்பங்கள் இருக்கின்றன.

இத்தகைய இக்கட்டான நிலைமைகளைக் கவனத்தில் கொண்டு தேர்தலுக்குப் பிந்தைய காலத்தில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கு நாடளாவிய ரீதியில் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று பாதுகாப்புத் தரப்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இதன்படி, நாட்டின் பல பகுதிகளில் பொலிஸார் நிலைநிறுத்தப்படவுள்ளனர். அதே வேளையில், செப்டம்பர் 21ஆம் திகதி தேர்தல் நாளுக்குப் பிறகு பாதுகாப்பை மேலும் அதிகரிக்க வேண்டியிருந்தால், முப்படை வீரர்களும் தயார் நிலையில் இருப்பார்கள் என்று மூத்த பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தேர்தல் நாள் மற்றும் தேர்தலுக்கு பிந்தைய காலம் முழுவதும், பாதுகாப்பு முதன்மையாக பொலிஸார் மற்றும் சிறப்பு அதிரடிப்படை மூலம் நிர்வகிக்கப்படும். எனினும், தேவைப்பட்டால் உதவ ஆயுதப்படைகள் தயார் நிலையில் இருக்கும் என்று மூத்த பொலிஸ் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

பொலிஸாரின் கோரிக்கைக்கு அமைய இராணுவப் படைகள் ஆதரவு வழங்கத் தயாராக இருப்பதை உறுதிப்படுத்துமாறு பாதுகாப்புப் படைகளின் பிரதானி அனைத்து பாதுகாப்புப் படைத் தளபதிகளுக்கும் பணிப்புரை விடுத்துள்ளார்.

முன்னதாக, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கு ஆயத்தமாக, தேர்தல் நடவடிக்கைகளை சுமுகமாக நடத்துவதற்காக 54,000 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

செப்டெம்பர் 21 ஆம் திகதி வாக்களிப்பு முடிவடைந்த பின்னர், முடிவுகள் அறிவிக்கப்படும் வரை வாக்களிப்பு நிலையங்களிலோ அல்லது வாக்கு எண்ணும் நிலையங்களிலோ குழுக்கள் கூடுவதற்கு அனுமதிக்கப்பட மாட்டாது.

மேலும், கொழும்பு நகரின் பல முக்கிய பகுதிகளில் பாதுகாப்பு அதிகரிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



# ரணிலுக்கு வாக்களிக்கவில்லையெனில் ஒவ்வொரு தமிழனும் வேதனைப்படுவான்

## நிம்மதியற்று அழுவான் என்றும் முன்னாள் எம்.பி. சங்கர் கூறுகின்றார்

"நாம் ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு வாக்களிக்கவில்லை என்றால் எதிர்காலத்தில் ஒவ்வொரு தமிழனும் வேதனைப்படுவான். நிம்மதியற்று அழுவான். எனவே, எமக்கு சேவைச் செய்தவரை எதிர்காலத்திலும் மறக்காது அவரை மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்வோம்."

– இவ்வாறு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் குணசேகரம் சங்கர் தெரிவித்தார்.

அம்பாறை, திருக்கோவில் பிரதேசத்தில் நேற்று புதன்கிழமை நடைபெற்ற "ரணிலால் இயலும்" வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் உரையாற்றுகையில், "இந்த நாட்டின் எதிர்காலம் என்பது நாட்டின் தலைவரின் வழிகாட்டலில் உள்ளது. இன்று எமது மக்களுக்குக் காணி உரிமை வழங்கப்பட்டுள்ளது. அரச காணிகள் அவர்களுக்கு முழு உரிமையுள்ள உறுதிப்பத்திரங்களுடன் வழங்கப்பட்டுள்ளது. வீடுகளின் உரிமைகளும் சொந்த வீடுகளாக வழங்கப் பட்டுள்ளன. இவை எதிர்காலத்திலும் முன்னெடுக்கப்பட வேண்டும்.

எமக்கு இரண்டு வருடங்கள் சேவை செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்கவுக்கு வாக்களித்து இன்னும் 5 வருடங்களுக்கு ஜனாதிபதியாகத் தெரிவு செய்தால், நாம் உரிமையுடனும் நெஞ்சை நிமிர்த்தியும் அவர்களிடம் எமது மக்களுக்கான தேவைகளைக் கேட்க முடியும். வெறும் வெட்டிப்பேச்சுக்காக தேவையற்ற தேசிய வாதத்தைப் பேசிக்கொண்டு எமது இருப்பைப் பாதுகாக்கக் கூடிய சூழலை இழந்து விடுகின்றோம்.

ஒரு கடதாசியில் சீனி என்று எழுதி விட்டு அதனைச் சுவைத்துப் பார்த்தால் இனிக்காது. ஏனைய வேட்பாளர்கள் அந்த வெற்றுக் கோஷங்களையே இடுகின்றார்கள். ஒருவர் எதிர்காலத்தில் என்ன செய்வார் என்பதை விட நிகழ்காலத்தில் என்ன செய்தார் என்பதே முக்கியம். அவ்வாறு செய்து காட்டியவரே எமது ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க.

ஒரு வேலையைச் செய்ய அதனைச் செய்யக் கூடிய பொருத்தமானவருக்கே வழங்க வேண்டும். புதிது, புதிதாக வந்து வெறுமனே கோஷமிடுவோரிடம் அதிகாரத்தைக் கொடுத்தால் தலைநிமிர முடியாத சூழல் ஏற்படும். ஜனாதிபதித் தேர்தல் என்பது ஐந்து வருடங்களுக்கு ஒரு முறை வருகின்றது. எனவே, அதில் எமது வாக்கு மிக முக்கியமானது. எனவே, இந்தத் தேர்தலில் நாம் சரியான முடிவை எடுக்க வேண்டும்.

எமது தேவைகளைக் கேட்டறியும் ஒருவரிடமே நாம் அனைத்தையும் பெற்றுக்கொள்ள முடியும். இன, மத பேதமின்றி செயற்படும் ரணில் விக்கிரம சிங்கிவிடமே எமக்கான உரிமைகளைப் பெற முடியும். நாம் இந்த ஜனாதிபதிக்கு வாக்களிக்கவில்லை என்றால் எதிர்காலத்தில் ஒவ்வொரு தமிழனும் வேதனைப்படுவான். நிம்மதியற்று அழுவான். எனவே, எமக்கு சேவைச் செய்தவரை எதிர்காலத்திலும் மறக்காது அவரை மீண்டும் ஜனாதிபதியாகத் தெரிவு செய்வோம்." – என்றார்.






# நாளுக்கு நாள் வஞ்சிக்கப்பட்டு கொண்டிருக்கும் 10 தமிழ் அரசியல் கைதிகளையும் விடுவிக்குக!

## குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு வேண்டுகோள்

(எஸ்.நிதர்ஷன்)

அரசியல் கைதிகளை விடுதலை செய்வதே ஆட்சி அதிகாரத்துக்கு உகந்தது என்று தெரிவித்துள்ள குரல் அற்றவர்களின் குரல் அமைப்பு, இனத்தின் பெயரில் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்பட்டு கொண்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை விடயத்தில் அரசின் உண்மையான இறுதி நிலைப்பாட்டைப் பொது வெளியில் தெரிவிக்க வேண்டும் என்றும் வலியுறுத்தியுள்ளது.

தேசிய சிறைக் கைதிகள் தினத்தையொட்டி குரல் அற்றவர்களின் குரல் அமைப்பின் ஏற்பாட்டில் அந்த அமைப்பின் ஒருங்கிணைப்பாளர் மு.கோமகன் மற்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் இணைந்து யாழ். ஊடக அமையத்தில் இன்று வியாழக்கிழமை நடத்திய ஊடக சந்திப்பின்போதே மேற்படி கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளது.

இதன்போது அறிக்கையொன்றையும் அவர்கள் வெளியிட்டுள்ளனர்.

அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“ஜனநாயகப் பெயர் கொண்டமைந்துள்ள இலங்கை நாட்டில், இன்று 116 ஆவது தேசிய சிறைக் கைதிகள் தின நிகழ்வுகள் இடம்பெற்றுக் கொண்டிருக்கின்றன. சுமார் 13 ஆயிரம் கைதிகளை மாத்திரமே தடுத்து வைத்திருக்கக்கூடிய இடவசதியைக்கொண்டசிறைக் கூடங்களுக்குள் 24 ஆயிரம் கைதிகளை திணித்து அடைத்து வைத்துக் கொண்டிருக்கின்ற நிலையிலையே சிறைத்துறை இந்தக் கைதிகள் தின நிகழ்வை மேற்கொண்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

இருப்பினும் உணவு, நீர், சுகாதாரம் மற்றும் மருத்துவம் போன்ற அடிப்படைக் கட்டமைப்புகள் போதுமற்ற நிலையில் பெயருக்காகக் கொண்டாடப்படுகின்றதா இந்தத் தேசிய சிறைக் கைதிகள் தினம்? என்கின்ற கேள்வி எழுகின்றது.

இத்தனை மோசமான கட்டமைப்பைக் கொண்டியங்கும் சிறைக்குள்ளேயே சமூகத்தை நேசித்த எமது தமிழ் அரசியல் கைதிகள், 30 ஆண்டுகளாக வாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பது எத்தனை கொடூரமானது?

“எமது நாடு, ஜனநாயக நாடு. நாம் கருணை அன்பு மிக்கதொரு பாரம்பரிய சமூக சமயத்தைச் சார்ந்தவர்கள். மறப்போம் மன்னிப்போம் என்பது எமது கொள்கையில் ஒரு அங்கம்.” - என்று மேடை முழக்கம் செய்கின்ற அரசும் அதன் அதிகாரமும்தான் எமது தமிழ் அரசியல் கைதிகளைப் பழிதீர்க்கும் போக்கில் 30 ஆண்டுகளாகச் சிறைக்குள் தடுத்து வைத்துக் கொண்டிருக்கின்றதா? எனக் கேட்கின்றோம்.

இன்று, தேர்தல் பரப்புரைகளாலும் எண்ணற்ற வாக்குறுதிகளாலும், நாடு நிரம்பித் ததும்பிக் கொண்டிருக்கின்றது. ஆனபோதிலும், தமிழினத்தின் பெயரில் மூன்று தசாப்த காலங்களாக சிறையில் கொடுமை அனுபவித்து வரும் எமது தமிழ் அரசியல் கைதிகளின் நரக வாழ்க்கைக்கான முற்றுப்புள்ளியின் எல்லை இதுவரை தெரியவில்லை.

உண்மையிலேயே ஒரு ஜனநாயக நாட்டினுடையசட்டங்களைஅமுல்படுத்துகின்ற நீதித்துறையும் அதற்கு ஒப்ப இயங்குகின்ற சிறைத்துறையும் அரச இயந்திரத்தின் முக்கிய இரு பிரிவுகளாகும்.

இவைகள், குற்றம் காணும் குடிமக்களைச் சீர்திருத்தி, குறிப்பிட்டதொரு காலத்துக்குள் மீண்டும் அவர்கள் சமூகத்துடன் சேர்ந்து வாழ்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கும் பொறுப்புக்குரிய நிறுவனங்களாகும்.

ஆனாலும்,தமிழ்அரசியல்கைதிகளுடைய விடுதலை விடயத்திலே அரசும் அதன் இயந்திரங்களும் மாற்றான் தாய் மனப்போக்குடன் நடந்து கொள்வதன் நோக்கம் என்ன?

காலம் காலமாக கதிரையேறும் சிங்கள ஆட்சி அதிகாரங்கள், தமிழ் மக்களை ஏமாற்றி வாக்குச் சூறையாடும் கலாச்சாரத்துக்கு இனிமேலாவது முற்றுப்புள்ளியிட வேண்டும். மக்களினதும் சர்வதேசத்தினதும் பார்வைக் கோணங்களை திசை மாற்றும் கைங்கரியத்தைக் கைவிட வேண்டும்.

நிச்சயமாக இதற்கு மேலும், கால வீணடிப்புச் செய்யாது தமிழ் மக்களின் தீர்க்கப்பட வேண்டிய அவசர அடிப்படை விடயங்களுக்கு தீர்வினைக் கூற வேண்டும்.

குறிப்பாக, இனத்தின் பெயரில் நாளுக்கு நாள் வஞ்சிக்கப்பட்டு கொண்டிருக்கும் 10 தமிழ் அரசியல் கைதிகளினதும் விடுதலை விடயத்தில், அரசின் உண்மையான இறுதி நிலைப்பாட்டைப் பொது வெளியில் தெரிவிக்க வேண்டும் என்பதைக் “குரலற்றவர்களின் குரல்“ மனிதநேய அமைப்பினராகிய நாம், இந்த ஆண்டு தேசிய சிறைக் கை-திகள் தினப் பகிரங்கக் கோரிக்கையாக முன்வைக்கின்றோம்.

அவ்வாறில்லையேல், இந்த நாட்டி-னுடைய ஆட்சி அதிகாரங்களுக்கும் அதற்குத் துணை செய்யும் குடி மக்களுக்கும் தமிழினத்தின் சாபக் கேடு என்பது தவிர்த்தொதுக்க முடியாத ஒரு காலத்தின் நியதியாகும் என்பதை நினைவூட்டக் கடமைப்படுகின்றோம்.” - என்றுள்ளது.

# நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம்



சரித்திரப் பிரசித்தி பெற்ற யாழ். வடமராட்சி கிழக்கு – நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் இன்று வியாழக் கிழமை ஆரம்பமானது.













EVEREST
FURNITURE
HIGH QUALITY PRODUCTS
(416) 332-0721
everestfurniture.ca
EverestFurnitureInc
80 FINCHDENE SQ M1X 1C1 SCARBOROUGH, CANADA

# சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு

இலக்கியவெளியின் வ.ஐ.ச.ஜெயபாலன் சிறப்பிதழ் வெளியீட்டு நிகழ்வு நாளை மறுதினம் (14) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு யாழ்ப்பாணம் அம்மன் வீதி நல்லூரில் அமைந்துள்ள எங்கட புத்தகங்கள் இல்லத்தில் இடம் பெறவுள்ளது.

யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் நா. சண்முகலிங்கன் தலைமையில் இடம் பெறவுள்ள இந்த நிகழ்வில் வெளியீட்டுரை யாழ்.பல்கலைக் கழக முன்னாள் தமிழ்த்துறைத் தலைவர் பேராசிரியர் எஸ்.சிவலிங்கராஜா நிகழ்த்துவார்.

உரைகளை யாழ். பல்கலைக்கழகம் சிரேஷ்ர விரிவுரையாளர் சுந்தரமூர்த்தி கபிலன், எழுத்தாளர் சின்னராஜா விமலன், கலாசார உத்தியோகத்தர் அ. சிவஞானசீலன், கவிஞர் கருணாகரன் ஆகியோர் நிகழ்த்துவார்.

நன்றியுரையை இலக்கியவெளி இணை ஆசிரியர் கலாநிதி சு.குணேஸ்வரன் நிகழ்த்துவார்.-



# கிண்ணியா மத்திய கல்லூரியில் விஞ்ஞான செய்முறை கண்காட்சி

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பாடசாலை மாணவர்களின் விஞ்ஞான பாடத்துக்கான செயன்முறை அறிவை விருத்தி செய்யும் வகையில் கிண்ணியா மத்திய கல்லூரி தரம் 10 மற்றும் தரம் 11 மாணவர்கள் ஒழுங்கு செய்திருந்த விஞ்ஞான செயன்முறை கண்காட்சி கல்லூரியில் இடம்பெற்றது.

புத்தகக் கல்விக்கு மேலதிகமாக செயன்முறை பயிற்சியின் போது மேலதிக அறிவை மாணவர்களுக்கு வழங்கும் நோக்கில் கல்லூரி அதிபரின் ஆலோசனையின் பேரில் விஞ்ஞான ஆசிரியர்களின் வழிநடத்தலில் இந்த கண்காட்சி இடம்பெற்றது.இந்த கண்காட்சியில் அருகிலுள்ள பாடசாலை மாணவர்களும் கலந்து கொண்டனர்.






# மாத்தளை அருட்கரம் அறக்கட்டளை நடத்திய இரத்ததானம், கண் பரிசோதனை

(அஸ்ஹர் இப்றாஹிம்)

மாத்தளை அருட்கரம் அறக்கட்டளை அமைப்பால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த இரத்ததானம் மற்றும் இலவச கண் பரிசோதனை முகாம் அண்மையில் மாத்தளை இந்துக் கல்லூரியில் நடைபெற்றன.

மாத்தளை பொது வைத்தியசாலையில் நிலவும் குருதித் தட்டுப்பாட்டை நிவர்த்தி செய்யும் வகையில் இந்த இரத்ததான முகாம் ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

பெரும் தொகையில் குருதிக் கொடையாளிகள் இந்த இரத்ததான முகாமில் கலந்து கொண்டனர்.








# மட்டு.வம்மிவட்டவான் விநாயகர் ஆலய சங்காபிஷேகம் இன்று!

(பழுவூரான்)

மட்டக்களப்பு வம்மிவட்டவான் கோலத்தலாமடு ஆலயடி விநாயகர் ஆலய சங்காபிஷேகம் இன்று வியாழக்கிழமை (12) பக்த அடியார்கள் புடைசூழ, வேதபாராயணங்கள் முழங்க நிகழ்த்தப்பட்டது.


இதனை முன்னிட்டு காலை வேளையில் பால்சேனை பால விநாயகர் ஆலயத்தில் இருந்து பெண்கள் பாற்குடம் ஏந்தி ஊர் வீதி வழியாக ஆலயத்தை வந்தடைந்தனர்.

இதன்போது பெண்களால் எடுத்து வரப்பட்ட பால் ஸ்ரீ விநாயகப் பெருமானுக்கு அபிஷேகம் செய்யப்பட்டது.

இந்தச் சங்காபிஷேகப் பெருவிழாவைக் காண மட்டக்களப்பு மாவட்டத்தின் நாலாபக்கமும் இருந்து பல நூற்றுக் கணக்கான அடியவர்கள் வருகை தந்திருந்ததைக் காண முடிந்தது.

இந்த நிலையில் இவ்வாலய உற்சவம் இன்று ஆரம்பமாகி ஞாயிற்றுக் கிழமை (15) தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.





# ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் அரியநேத்திரனை ஆதரித்து கூட்டம்

(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஜனாதிபதி தமிழ் பொது வேட்பாளர் பா.அரியநேத்திரனை ஆதரித்து மாபெரும் பொதுக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை (13) மாலை 3 மணிக்கு மன்னார் நகர பஸ் நிலையத்தில் இடம்பெறவுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதனின் ஏற்பாட்டில், முன்னாள் பிரதேச சபை உறுப்பினர் மோகன்ராஜ் ஒருங்கிணைப்பில் குறித்த பொதுக்கூட்டம் இடம்பெறவுள்ளது.

இந்தப் பொதுக் கூட்டத்தில் தமிழ் தேசிய பொதுக் கட்டமைப்பின் சார்பில் அரசியல் கட்சித் தலைவர்கள், பொது அமைப்புகளின் பிரதிநிதிகள் கலந்து கொண்டு உரையாற்றவுள்ளனர்.







# நற்பிட்டிமுனை நூலகத்தில் எழுத்தறிவு தின நிகழ்வுகள்

**(அஸ்லம் எஸ்.மௌலானா)**

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு கல்முனை மாநகர சபைக்கு உட்பட்ட கரைவாகு மேற்கு நற்பிட்டிமுனை பொது நூலகத்தில் ஒழுங்கு செய்யப் பட்டிருந்த உலக எழுத்தறிவு தின சிறப்பு நிகழ்வு நூலக மண்டபத்தில் நடை பெற்றது.

கல்முனை மாநகர ஆணையாளர் என்.எம். நௌபீஸின் ஆலோசனையின் பேரில் உதவி ஆணையாளர் ஏ.எஸ். எம். அஸீமின் வழிகாட்டலில் நூலக வாசகர் வட்டத்தின் ஒத்துழைப்புடன் ஒழுங்கு செய்யப்பட்டு, நூலகர் எஸ். எம்.ஆர். அமினுதீன் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் இரண்டு சமாதான பாலர் பாடசாலைகளைச் சேர்ந்த 40 மாணவர்கள் கலந்து கொண்டனர்.

இந்தச் சிறப்பு நிகழ்வில் நூலகத்தின் வாசகர் வட்ட தலைவர் ஏ. அப்துல் கபூர், செயலாளர் எஸ். சிராஜுதீன் ஆகியோரும் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளில் பங்குபற்றிய மாணவர்களுக்கு பரிசு களை வழங்கி வைத்தனர்.




குணம்ஸ் சூப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998





# சஜித்தின் ஆதரவுக் கருத்தரங்கு

(நூருல் ஹுதா உமர்)

ஐக்கிய மக்கள் கூட்டணியின் ஜனாதிபதி வேட்பாளரும், எதிர்க்கட்சி தலைவருமான சஜித் பிரேமதாஸவை ஆதரித்து கல்முனை தேர்தல் தொகுதியின் கல்முனை 12 ஆம் வட்டாரத்தை மையப்படுத்திய கருத்தரங்கு நேற்று புதன்கிழமை (11) இரவு முஸ்லிம் காங்கிரஸின் 12 ஆம் வட்டார அமைப்பாளரும், முன்னாள் மாநகர சபை வேட்பாளருமான பிரிலியண்ட் எம்.எஸ். பழிலின் தலைமையில் அவரின் இல்லத்தில் நடைபெற்றது.



இந்த நிகழ்வில் முன்னாள் இராஜாங்க அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸ் பிரதம அதிதியாக கலந்து கொண்டு தற்போதைய அரசியல் சூழ்நிலை சம்பந்தமான சிறப்புரை நிகழ்த்தினார்.

இப் பிரச்சார கூட்டத்தில் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பொருளாளரும், கல்முனை மாநகர சபை முன்னாள் பிரதி மேயருமான ரஹ்மத் மன்சூர், கட்சியின் தேசிய அமைப்பாளரும், முன்னாள் கிழக்கு மாகாண சபை அமைச்சருமான எம்.எஸ் உதுமா லெப்பை, ஐக்கிய மக்கள் சக்தியின் கல்முனை அமைப்பாளர் சட்டத்தரணி எம்.எஸ். அப்துல் ரஸாக், கல்முனை மாநகர சபை முன்னாள் உறுப்பினர்களான எம்.எஸ்.எம்.நிசார், எம்.ஏ. கலீலுர் ரஹ்மான், ஏ,சி சமால்தீன், கல்முனை 12 ஆம் வட்டார வேட்பாளர் எம். ரகுமான், கல்முனை சந்தை வர்த்தக சங்க செயலாளர் ஏ.எச் கபீர் உட்பட பொதுமக்கள் பலரும் கலந்து கொண்டனர்.





# கல்முனை தேர்தல் தொகுதிக்கான தேர்தல் ஆயத்த முன்னேற்பாடுகள்

(நூருல் ஹுதா உமர்)

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேம தாஸவை ஆதரித்துக் கல்முனை தொகுதிக்கான பிரச்சாரக் கூட்டம் நாளை மறுதினம் (14) சாய்ந்தமருது பௌசி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்தப் பிரச்சாரக் கூட்டம் தொடர்பாகவும் கல்முனை தேர்தல் தொகுதிக்கான தேர்தல் ஆயத்த முன்னேற்பாடுகள் தொடர்பாகவும் கலந்துரையாடல் ஒன்று சாய்ந்தமருதில் நடைபெற்றது.

முன்னாள் இராஜாங்க அமைச்சரும், நாடாளுமன்ற உறுப்பினருமான, ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் பிரதித் தலைவர் சட்டத்தரணி எச்.எம்.எம் ஹரீஸின் ஒருங்கமைப்பில் இடம்பெற்ற இந்தக் கலந்துரையாடலில் கல்முனை தொகுதியை பிரதிநிதித்துவப்படுத்தும் ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் கட்சிகளின் அதியுயர் பீட உறுப்பினர்கள், ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர்கள், பிரமுகர்கள், மாவட்ட குழுக்களின் தலைவர்கள், செயலாளர்கள், நிர்வாகிகள், பிரதேச அமைப்பாளர்கள் மற்றும் கட்சி முக்கியஸ்தர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஜனாதிபதி தேர்தல் பிரச்சார பொதுக்கூட்டம் வெற்றிகரமாக நடைபெற தேவையான விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டு தீர்மானங்கள் மேற்கொள்ளப்பட்டது.



# வாக்களிப்பது எப்படி? அம்பாறையில் சுவரொட்டிகள்






( வி.ரி.சகாதேவராஜா)

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் வாக்களிப்பது எப்படி? என்பது தொடர்பான விழிப்புணர்வு சுவரொட்டிகள் அம்பாறை மாவட்டத்தில் பரவலாக ஒட்டப்பட்டு வருகின்றன.

வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவால் இவை ஒட்டப்பட்டு வருகின்றன. அனைவரும் வாக்களிக்க செய்யும் வகையிலும் அத்தோடு முறையாக இம்முறை எவ்வாறு வாக்களிப்பது எனும் விடயங்கள் அடங்கிய சுவரொட்டிகளே இவ்வாறு ஒட்டப்பட்டு வருகின்றன.

அம்பாறை மாவட்டத்தில் தற்போது பரவலாகச் சகல பகுதிகளிலும் ஒட்டப்படுகின்றது என அமைப்பின் மாவட்ட இணைப்பாளர் து.காத்தவராயன் தெரிவித்தார்.

# மூவின சமூகமும் ஒற்றுமையாக வாழ சஜித்தின் ஆட்சியே மலர வேண்டும்

## அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் அமீர்

(எம். எப். றிபாஸ்)

மூவின சமூகமும் இந்த நாட்டில் ஒற்றுமையாக வாழ வேண்டுமாகவிருந்தால் சஜித் பிரேமதாஸவின் ஆட்சி மலர வேண்டும். அப்போதுதான் இந்த நாடும் நாட்டு மக்களும் சுபீட்சம் பெற்றவர்களாக மாற முடியும்.

அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் அட்டாளைச்சேனை அமைப்பாளர் ஏ.கே.அமீர் இவ்வாறு தெரிவித்தார்.

அட்டாளைச்சேனையில் அவரது கட்சிக அலுவலகத்தில் இடம் பெற்ற இளைஞர்களுடனான சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

தொடர்ந்தும் அவர் தனது உரையில், அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் தலைவர் றிஷாட் பதியூத்தீனின் கரத்தை பலப்படுத்துவதன் மூலம் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸவை வெற்றி பெறச் செய்து ஒரு நல்லாட்சியை ஏற்படுத்த முடியும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி நாட்டையும், நாட்டின் வளங்களையும் சூறையாடி கொள்ளையடித்த கூட்டத்தையும் எதிர்வரும் தேர்தலுடன் முடிவுக்கு கொண்டு வர வேண்டும். இவர்களது பொய்ப் பிரச்சாரங்களுக்கு நாம் ஒருபோதும் இடமளிக்கக் கூடாது.



எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ இந்தத் தேர்தலில் வெற்றி பெறுவது உறுதி செய்யப்பட்ட ஒன்றாகிவிட்டது. இந்த நிலையில், அகில இலங்கை மக்கள்காங்கிரஸ்பிரதிநிதித்துவப்படுத்துகின்ற இப்பிரதேச இளைஞர்களாகிய நாம் இதனுடன் இணைந்து தியாகம் செய்ய வேண்டும்.

எல்லா வகையான வேலைத் திட்டங்களிலும் கொள்ளையடிப்பதையும், சுரண்டுவதையும் நோக்கமாகக் கொண்டிருந்தவர்களால் தான் இந்த நாடு பெரும் பஞ்சத்தை அனுபவித்தது. இதனால் நாட்டு மக்கள் அனுபவித்த துன்ப துயரங்கள் கொஞ்ச நஞ்சம் அல்ல.

இப்படிப்பட்டவர்களை மீண்டும் ஆட்சிக்கு கொண்டு வருவது இந்த நாட்டு மக்களுக்கு செய்யும் துரோகமாகும்.

மக்களின் ஜனநாயக ஆணையை மீறி அல்லது உதாசீனப்படுத்தி சர்வதேசத்தின் உதவியோடு ஊழல் மோசடி செய்து நாசகார செயல்களில் ஈடுபட்டு வெற்றி பெற முயற்சித்தால் அவ்வாறானவர்கள் மீண்டும் ஒரு மக்கள் புரட்சியை சந்திக்க வேண்டிய நிலை ஏற்படும். இதனால் அவர்கள் நாட்டை விட்டு ஓடும் நிலைக்குத் தள்ளப்படுவார்கள்.

இளைஞர்களாகிய நாம் வீடு வீடாகச் சென்று சஜித் பிரேமதாஸவின் ரெலிபோன் சின்னத்துக்கு வாக்களிக்குமாறு மக்களை திரட்ட வேண்டும். ஊழல் நிறைந்த ஆட்சியை முடிவுக்கு கொண்டு வந்து கொள்ளை கும்பலை வீட்டுக்கு அனுப்ப முடியும்.

இத்தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க படுதோல்வி அடைவதுடன், ஜனநாயகத்தையும் ஜனநாயக ஆட்சியையும் நேசிக்கின்ற சஜித் பிரேமதாஸ அமோக வெற்றி பெற்று இந்த நாட்டின் ஜனாதிபதியாக திகழ்வார் என்பதில் மாற்றுக்கருத்து கிடையாது.- என்றார்.

# ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவினர் மன்னாருக்கு



(மன்னார் எஸ்.ஆர்.லெம்பேட்)

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் நேற்று புதன்கிழமை (11) மாலை மன்னாருக்கு விஜயம் செய்தனர்.

இதன் போது நாடாளுமன்ற உறுப்பினர் சாள்ஸ் நிர்மலநாதனை அவருடைய மன்னார் அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளனர்.

தற்போதைய ஜனாதிபதி தேர்தல் மற்றும் தற்போதைய சூழ்நிலைகள் தொடர்பாகவும் நாடாளுமன்ற உறுப்பினரிடம் கேட்டறிந்து கொண்டனர்.

இதன்போது இலங்கை தமிழரசு கட்சியின் மன்னார் மாவட்ட செயலாளர் ஜஸ்ரின் துரம் அவர்களும் இச் சந்திப்பில் கலந்து கொண்டார்.

# ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேயின் கருத்துரையும் திறந்த கலந்துரையாடலும்

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் நுவன் போபகேயின் கருத்துரையும் திறந்த கருத்துரையாடலும் நாளை மறுதினம் (14) சனிக்கிழமை மாலை 3.30 மணிக்கு கொக்குவில் சந்தியிலுள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் நடைபெற உள்ளது.

மக்கள் போராட்ட முன்னணியின் பிரமுகரான தோழர். சி.கா.செந்தில்வேல் தலைமையில் இந்தக் கலந்துரையாடல் இடம்பெறும்.



## சிதம்பரத்தில் கார் - லொறி நேருக்கு நேர் மோதல்

# குழந்தை உட்பட ஐந்து பேர் சாவு!

சிதம்பரம் அருகே உள்ள பு.முட்லூர் மேம்பாலத்தின் அருகே சென்று கொண்டிருந்த கார் ஒன்றுடன் லொறி மோதியதில் காரில் வந்த 3 வயதுக் குழந்தை உட்பட ஐவர் சாவடைந்தனர்.

மயிலாடுதுறை மாவட்டம் குத்தாலத்தை அடுத்த நக்கம்பாடி கிராமத்தைச் சேர்ந்தவர் முகமது அன்வர் (வயது-56). இவரது உறவினர் ஒருவர் உடல்நலக்குறைவால் துபாயில் இருந்து அழைத்து வரப்பட்டு சென்னையில் உள்ள வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டார். இவரை பார்ப்பதற்காக அன்வர் தனது உறவினர்களுடன் கார் ஒன்றில் சென்றார்.

பின்னர் சென்னையில் சிகிச்சை பெற்று வருபவரைப் பார்த்து விட்டு மீண்டும் ஊருக்குத் திரும்பிக் கொண்டிருந்தார். இவர்கள் வந்த காரை தஞ்சாவூர் மாவட்டம் கும்பகோணம் அருகே உள்ள கொரநாட்டு கருப்பூரைச் சேர்ந்த யாசர் அராபத் (வயது 40) என்பவர் ஒட்டி வந்தார்.

காரில் நக்கம்பாடிச் கிராமத்தை சேர்ந்த ஹாஜிரா பேகம் (வயது-62), திருமங்கலம் கிராமத்தைச் சேர்ந்த ஹராபத் நிஷா (வயது-30) அவரது குழந்தை அப்னான் (வயது-3) ஆகியோரும் பயணம் செய்தனர்.

இந்தக் கார் இன்று அதிகாலை சிதம்பரம் அருகே உள்ள பு.முட்லூர் மேம்பாலத்தின் அருகே வந்தது. அப்போது எதிரே வந்த லொறி ஒன்று கட்டுப்பாட்டை இழந்து கார் மீது மோதியது. இதில் சிக்கிய 5 பேரும் பரிதாபமாக உயிரிழந்தனர்.

தகவல் அறிந்து சம்பவ இடத்திற்கு வந்த பரங்கிப்பேட்டை பொலிஸார் மற்றும் தீயணைப்புத் துறையினர் விபத்தில் சிக்கியவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக சிதம்பரம் அரசு வைத்தியசாலைக்கு அனுப்பி வைத்தனர். விபத்து நடந்தவுடன் லொறிச் சாரதி தப்பி ஓடிவிட்டார். அவரைப் பொலிஸார் தேடி வருகின்றனர்.





# காசாவில் இஸ்ரேல் வான் தாக்குதல் ஐ.நா. ஊழியர்கள் உட்பட 34 பேர் பலி

# ஐ.நா. கண்டனம்!

காசாவில் இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் ஐ.நா. ஊழியர்கள் உள்பட 34 பேர் உயிரிழந்துள்ளனர். இதற்கு ஐ.நா. கடும் கண்டனத்தைத் தெரிவித்துள்ளது.

காசா முனையில் செயல்பட்டு வரும் ஹமாஸ் ஆயுதக்குழுவினர் கடந்த ஆண்டு ஒக்டோபர் 7ஆம் திகதி இஸ்ரேலுக்குள் புகுந்து பயங்கரவாதத் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஆயிரத்து 139 இஸ்ரேலியர்கள் கொல்லப்பட்டனர். மேலும், இஸ்ரேலிலிருந்து 251 பேரைப் பணயக் கைதிகளாக காசா முனைக்கு ஹமாஸ் அமைப்பினர் கடத்திச் சென்றனர்.

இதையடுத்து ஹமாஸ் ஆயுதக்குழு மீது இஸ்ரேல் அரசு போர் அறிவித்தது. இதுவரை ஒப்பந்த அடிப்படையில் பணயக் கைதிகள் 100க்கும் மேற்பட்டோரை இஸ்ரேல் மீட்டுள்ளது. தொடர்ந்து ஹமாஸ் அமைப்பினரை முழுவதுமாக அழிக்கும் நோக்கில் காசாவில் உள்ள பல்வேறு பகுதிகள் மீது இஸ்ரேல் இராணுவம் தொடர் தாக்குதல்களை நடத்தி வருகிறது. இந்தத் தாக்குதல்களில் இதுவரை சுமார் 41 ஆயிரத்துக்கு அதிகமான பாலஸ்தீனர்கள் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், காசாவின் மத்திய பகுதியில் அமைந்துள்ள நுசிராட்டில் உள்ள பள்ளிக்கூடமான தங்குமிடத்தின் மீது நேற்று இஸ்ரேல் நடத்திய வான்வழித் தாக்குதலில் 6 ஐ.நா. ஊழியர்கள், 19 பெண்கள் உள்பட 34 பேர் உயிரிழந்தனர்.

இந்தச் சம்பவத்திற்கு ஐ.நா. தலைவர் கண்டனம் தெரிவித்துள்ளார். இது தொடர்பாக அவர் தனது எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

"காசாவில் நடப்பது முற்றிலும் ஏற்றுக்கொள்ள முடியாதது. சுமார் 12 ஆயிரம் பேர் தங்குமிடமாக மாறிய பள்ளிக்கூடத்தின் மீது மீண்டும் இஸ்ரேலிய வான்வழித் தாக்குதல்களால் தாக்கப்பட்டது. கொல்லப்பட்டவர்களில் நமது ஊழியர்கள் 6 பேர் அடங்குவர். சர்வதேச மனிதாபிமான சட்டத்தின் இந்த வியத்தகு மீறல்கள் இப்போது நிறுத்தப்பட வேண்டும்" என்று தெரிவித்துள்ளார்.

பக்கங்கள் 08

கனடா முரசு

வியாழக்கிழமை 12/09/2024

## பிரம்டன் சூட்டில் ஒருவர் படுகாயம்

கனடாவின் பிரம்டன் பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டு சம்பவத்தில் நபர் ஒருவர் படுகாயம் அடைந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பில் பீல் பிராந்திய பொலிஸார் 02



# தேர்தலில் வெளிநாட்டுத் தலையீடு குறித்த விசாரணையில் பிரதமரும் பங்குபற்றுவார்

**ஒன்றாரியோ, செப்ரம்பர் 12**

**பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ மற்றும் அவரது உள் வட்ட உறுப்பினர்கள் எதிர் வரும் வாரங்களில் வெளிநாட்டு தலையீடு குறித்த மத்திய அரசின் விசாரணையில் கலந்து கொள்ளவுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.**

**விசாரணையின் அடுத்த கட்ட பொதுப் பணிக்காக புதிதாக வெளியிடப்பட்ட தற்காலிக சாட்சி பட்டியல், மூத்த அரசாங்க அதிகாரிகள் மற்றும் தேசிய பாதுகாப்பு ஏஜென்சிகளின் உறுப்பினர்களும் சாட்சியமளிப்பார்கள் என்பதைக் குறிக்கிறது.**

2019 மற்றும் 2021 நாடாளுமன்றத் தேர்தல்களில் வெளிநாட்டு தலையீடு குறித்த குற்றச்சாட்டுகள் தொடர்பாக இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஆணையத்தின் ஆரம்ப விசாரணைகளில் ட்ரூடோ மற்றும் முக்கிய அரசாங்க அதிகாரிகள் பங்கேற்றனர்.

மே மாத தொடக்கத்தில் வெளியிடப்பட்ட ஆணையாளர் மேரி-ஜோசி ஹோகின் இடைக்கால அறிக்கை, சீனாவின் வெளிநாட்டு தலையீடு இரண்டு பொதுத் தேர்தல்களின் ஒட்டுமொத்த முடிவுகளை பாதிக்கவில்லை என்று கூறியது.

சிறிய எண்ணிக்கையிலான தேர்தல் தொகுதிகளின் முடிவுகள் குறுக்கீட்டால் பாதிக்கப்பட்டிருக்கலாம் என்றாலும், இதை உறுதியாகக் கூற முடியாது என்று அறிக்கை கூறியது.

விசாரணையின் இரண்டாம் தொகுதியில், வெளிநாட்டுத் தலையீட்டைக் கண்டறிதல், தடுப்பது மற்றும் எதிர்கொள்வது போன்றவற்றில் கூட்டாட்சி நிறுவனங்களின் திறன் குறித்துக் கவனம் செலுத்தப்படும் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# மொன்ரியல் அடுக்குமாடி குடியிருப்பில் இரண்டு முதியவர்கள் சூட்டுக் கொலை!

கியூபெக், செப்ரம்பர் 12

மொன்ரியல் அடுக்குமாடி குடியிருப்பில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களால் இறந்த 70 வயதுடைய இருவரின் மரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

70 வயது முதியவர் மற்றும் 71 வயது மூதாட்டி ஒருவரின் மரணம் வீட்டு தகராறு காரணமாக ஏற்பட்டதாக இருக்கலாம் எனப் பொலிஸார் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

நேற்று காலை 9 மணியளவில் நகரின் கிழக்கே உள்ள அடுக்குமாடி குடியிருப்புக்குத்தாம் அழைக்கப்பட்டனர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதன்போது வீடொன்றில் உயிரிழந்த நிலையில் இருவரின் சடலங்களைப் பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

விசாரணைகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதால் மேலதிக விவரங்கள் எதனையும் பொலிஸார் வெளியிடவில்லை.





# கனடாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் காசாவுக்குச் செல்லத் தடை விதிக்கப்படும்

## உறுதி கூறுகிறார் வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி

ஒன்றாரியோ, செப்ரம்பர்12

கனடாவில் தயாரிக்கப்பட்ட ஆயுதங்கள் காசா பகுதிக்கு செல்ல தடை விதிக்கப்படும் என கனடிய வெளிவிவகார அமைச்சர் தெரிவித்தார்.

வெளிவிவகார அமைச்சர் மெலானி ஜொலி இந்தத் தகவலை வெளியிட்டார்.

கியூபெக்கில் தயாரிக்கப்பட்ட வெடிமருந்துகளை இஸ்ரேலுக்கு அனுப்பும் திட்டத்தை அமெரிக்கா அறிவித்த சில வாரங்களுக்குப் பின்னர் இந்தத் தகவல் வெளியானது.

இஸ்ரேலுக்கு ஆயுத ஏற்றுமதியை அங்கீகரிப்பதை நிறுத்துவதற்கான ஒரு பிரேரணையை லிபரல் - புதிய ஜனநாயகக் கட்சிகள் கடந்த மார்ச் மாதம் நிறைவேற்றியிருந்தமை குறிப்பிடத்தக்கது.



## பிரம்டன்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

ஒலிம்பியா கிரசன்ட் பகுதியில் இந்த துப்பாக்கிச் சூட்டு சம்பவம் இடம்பெற்றுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சம்பவம் தொடர்பில் தகவல் அறிந்து கொண்ட பொலிஸார், அந்த இடத்திற்கு விரைந்துள்ளனர்.

இதன்போது படுகாயம் அடைந்த நபர் ஒருவர் வீழ்ந்து கிடப்பதை பொலிஸார் அவதானித்துள்ளனர்.

அந்த நபரை உடனடியாக வைத்தியசாலையில் சேர்த்தனர் எனெ பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

இந்த நபர் படுகாயம் அடைந்துள்ள போதிலும் உயிர் ஆபத்து கிடையாது எனப் பொலிஸார் மேலும்தெரிவிக்கின்றனர்.

இந்த சம்பவத்துடன் தொடர்புடைய எவரும் கைது செய்யப்படவில்லை எனவும் தெரிவிக்கப்படுகிறது.



# சமூக ஊடகக் கணக்குகளில் கருத்துக்களை கட்டுப்படுத்தும் முடிவில் மொன்றியல் மேயர்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 12

மொன்றியல் மேயர் வலேரி பிளாண்டே தனது சமூக ஊடக கணக்குகளில் கருத்துக்களைக் கட்டுப்படுத்தும் முடிவைப் பின்பற்றி வருகின்றார்.

அவர் இன்று காலை எக்ஸ் தளத்தில் அழைக்கப்பட்ட மோசமான பெயர்களின் ஸ்கிரீன் ஷிட்களை வெளியிட்டார்.

மேலும் பல மாதங்களாக தனது இடுகைகளில் உள்ள கருத்துகள் அவமானங்களால் ஆதிக்கம் செலுத்துவனவாகவும், அதனால் அவற்றைத் தடுக்க முடிவு செய்தார் எனவும் கூறுகிறார்.

எக்ஸ் தளத்தில் கருத்துகளை முடக்குவதன் மூலம் கருத்துச் சுதந்திரத்தை வரம்புக்குட்படுத்துவதாகவும், இன்ஸ்ராகிராம் இடுகைகளில் அவரைப் பின்தொடர்பவர்கள் மட்டுமே கருத்து தெரிவிக்க அனுமதிப்பதாகவும் மொன்றியலின் எதிர்க்கட்சித் தலைவரும் கனடிய சிவில் லிபர்ட்டிஸ் அசோசியேஷன் தலைவருமான பிளாண்டே விமர்சித்துள்ளார்.

சமூக ஊடகங்களைப் பயன்படுத்தும் தேர்ந்தெடுக்கப்பட்ட அதிகாரிகள் அந்த தளங்களில் உள்ள உறுப்பினர்களிடமிருந்து கேட்க தயாராக இருக்க வேண்டும் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.




# பேரிடர்களின் அழிவு 2024 இல் உச்சம்!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 12

நாடு முழுவதும் வானிலை பேரழிவுகளால் அதிக தொகை விரயமான வருடமாக 2024 உள்ளது.

2024இல் வானிலை தொடர்பான பேரிடர்களின் மொத்தச் செலவு இது வரை 5.15 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளது என பேரழிவு குறியீடுகள் மற்றும் அளவுபடுத்தல் நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தத் தொகை 2016 இல் சாதனை படைத்த காப்பீட்டுத் தொகையான 5.06 பில்லியன் டொலர்களைத் தாண்டியுள்ளது.

மேலும் இந்த வருடம் இன்னும் முடிவடையவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த ஆண்டு இதுவரை ஏற்பட்ட மிக விலையுயர்ந்த பேரழிவு ஓகஸ்ட் 5 அன்று கல்கரியில் பதிவான ஆலங்கட்டி மழை ஆகும்.

இது காப்பீட்டாளர்களுக்கு 2.06 பில்லியன் டொலர் இழப்புகளை ஏற்படுத்தியுள்ளது.

புயல், விமான நிலையம் உட்பட வடக்கு கல்கரியில் 35,000 கட்டடங்களுக்கு சேதம் விளைவித்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது,

1 பில்லியன் டாலர் செலவாகும் என மதிப்பிடப்பட்ட மற்றொரு விலையுயர்ந்த புயல் தெற்கு ஒன்றாறியோவில் ஏற்பட்ட வெள்ளம் ஆகும்.

குறிப்பாக றொரன்ரோவில் ஜூலை 16 அன்று பெரும் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டது, வீடுகளுக்கு சேதம் ஏற்பட்டு, சாலை முடப்பட்டது மற்றும் ஏராளமான உள்கட்டமைப்பு சேதங்களை ஏற்படுத்தியது.

ஜூலை மற்றும் ஓகஸ்ட் மாதங்களில் பேரழிவை ஏற்படுத்திய ஜெஸ்பர் காட்டுத்தீ காப்பீட்டாளர்களுக்கும் விலை உயர்ந்தது.

வீடுகள், வணிகங்கள் மற்றும் உள்கட்டமைப்புகளுக்கு ஏற்பட்ட சேதம் 880 மில்லியன் டொலர்கள் என மதிப்பிடப்பட்டுள்ளது.



# றொரன்ரோ பெருநகரம் முழுதும் வாகனங்களைத் திருடிய கும்பல்

## எட்டுப் பேருக்கு எதிராக 55 குற்றச்சாட்டுகள்

ஒன்றாரியோ, செப்ரம்பர் 12

வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதற்காக றொரன்ரோ பெருநகரம் முழுவதும் உயர்தர வாகனங்களைத் திருடிய ஒரு ஒழுங்கமைக்கப்பட்ட குழுவினைச் சேர்ந்த எட்டு ஆண்கள் மீது ஹோல்டன் பிராந்திய பொலிஸார் குற்றம் சாட்டியுள்ளனர்.

பல மாத விசாரணையில் இது வரை 55 குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டுள்ளன என ஹோல்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றம் சாட்டப்பட்டவர்களில் 4 பேர் கைது செய்யப்பட்டு பிணை விசாரணைக்காகக் காத்திருக்கின்றனர்,

மேலும் நான்கு பேரிற்கு கனடா முழுவதும் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டுள்ளது.

இந்த ஆண்டு ஜனவரி மற்றும் ஓகஸ்ட் மாதங்களுக்கு இடையில், குறைந்தபட்சம் 40 வாகனங்கள், முதன்மையாக புதிய மாடல் வாகனங்கள் மற்றும் சுமார் 3 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள சொகுசு லெக்ஸஸ் வாகனங்கள் ஆகியவற்றைக் குழு திருடியுள்ளதாக பொலிஸார் குற்றம் சாட்டினர்.

வாகனங்கள் கடல் கொள்கலன்களில் ஏற்றப்பட்டு மொன்ட்ரியல் துறைமுகத்திற்கு கொண்டு செல்லப்பட்டு, துபாய் மற்றும் மொராக்கோவிற்கு அனுப்பப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.



# எதிர்க் கட்சியோடு அணி வகுப்பதற்கு புதிய ஜனநாயகக் கட்சி பின்னடிப்பு!

கியூபெக், செப்ரம்பர் 12

அரசாங்கத்தை கவிழ்க்குமாறு சவால் விடுத்த பியர் பொய்லியெவ்வின் ஆலோசனையைப் பெறப் போவதில்லை என்று புதிய ஜனநாயகக் கட்சித் தலைவர் ஜக்மீத் சிங் தெரிவித்துள்ளார்.

அவரது கட்சி லிபரல் அரசுக்கு வழங்கி வந்த ஆதரவை விலக்கிக் கொள்வதாக அறிவித்துள்ளா பின்னணியிலேயே பியர் பொய்லியெவ் இந்த ஆலோசனையை வழங்கியிருந்தார்.

கனேடியர்களிடமிருந்து பல் பராமரிப்பு கவரேஜை அகற்ற பியர் பொய்லியெவ் முயற்சிக்கின்றார் என ஜக்மித் சிங் குற்றம் சாட்டினார்.

லிபரல் அரசுக்கு ஆதரவு வழங்கியமை மூலம் பல் பராமரிப்பு கவரேஜை அரசு முன்னெடுக்க புதிய ஜனநாயகக் கட்சி வழி செய்திருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

‘உங்கள் அறிவுரையை நான் கேட்கப் போவதில்லை, நீங்கள் மக்களின் வாழ்க்கையை அழிக்க விரும்புகிறீர்கள், நான் ஒரு பிரகாசமான எதிர்காலத்தை உருவாக்க விரும்புகிறேன்’ என அவர் குறிப்பிட்டுள்ளார்.

அரசாங்கத்தின் மீது நம்பிக்கையில்லா பிரேரணைக்கு வாக்களிப்பதாக உறுதியளிக்குமாறு சிங்கிற்கு, எதிர்க்கட்சித் தலைவர் சவால் விடுத்திருந்தார்.

பொய்லியேவ் சொல்வதைக் கேட்கப் போவதில்லை எனத் தெரிவித்த போதிலும், நம்பிக்கையில்லாப் பிரேரணைக்கு எப்படி வாக்களிக்கும் என்று ஜக்மீத் சிங் கூறவில்லை.




# திருடப்பட்ட சர்ச்சிலின் படத்தை மீளப் பெறுவதற்கு நடவடிக்கை!

ஒன்றாரியோ, செப்ரம்பர் 12

வின்ஸ்டன் சர்ச்சிலின் சின்னமான ‘உறுமும் சிங்கம்’ உருவப்படம், இரண்டு ஆண்டுகளுக்கு முன்பு திருடப்பட்ட பின்னர், பெயார்மொன்ட் சட்டே லோரியவில் விரைவில் மீண்டும் காட்சிப்படுத்தப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்த மாதத்தின் பிற்பகுதியில், பொக்கிஷமான அந்தப் புகைப்படத்தை மீட்டெடுப்பதற்காக, இரண்டு புலனாய்வாளர்கள் இத்தாலியின் ரோம் நகருக்குச் செல்வார்கள் என்று ஒட்டாவா பொலிஸார் நேற்று தெரிவித்தனர்.

புகழ்பெற்ற கனேடிய புகைப்படக் கலைஞர் யூசுப் கர்ஷலினால் எடுக்கப்பட்ட உருவப்படம், டிசம்பர் 25, 2021 மற்றும் ஜனவரி 6, 2022 க்கு இடைப்பட்ட காலத்தில் ஹோட்டலின் லாபியில் இருந்து திருடப்பட்டது. ஆனாலும், ஆகஸ்ட் 2022 இலேயே திருடப்பட்டமை கண்டறியப்பட்டது.

20 ஆம் நூற்றாண்டின் மிகவும் மறுஉருவாக்கம் செய்யப்பட்ட படங்களில் ஒன்றான அந்த படம், ஒரு போலி நகலால் மாற்றப்பட்டிருந்தது.



# தனது லிபரல் கட்சியின் எம்.பிக்களுடன் கலந்தாலோசிக்கின்றார் பிரதமர் ட்ரூடோ

பிரிட்டிஷ் கொலம்பியா, செப்ரம்பர் 12

நாடாளுமன்ற அமர்வுகள் ஆரம்பிக்கவுள்ள நிலையில், எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொய்லியேவ்வின் நடவடிக்கைகள் குறித்து அறிய ஆவலாக இருக்கின்றார் எனப் பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோ தெரிவித்துள்ளார்.

பிரிட்டிஷ் கொலம்பியாவின் நனைமோ நகரில் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்களிற்கான மூன்று நாளகள் கலந்துரையாடல் சந்திப்பு நேற்று முதல் நடைபெற்று வருகின்றது.

இந்த நிலையிலேயே, பிரதமர் ஜஸ்டின் ட்ரூடோவின் கருத்து வெளியாகியுள்ளது.

நீண்டகாலமாக லிபரல் கட்சியினரின் கோட்டையாக இருந்த டொரன்டோ தேர்தல் தொகுதியை கன்சர்வேட்டிவ் கட்சியின் வேட்பாளரிடம் இழந்ததன் பின்னர் லிபரல் நாடாளுமன்ற உறுப்பினர்கள் அனைவரையும் பிரதமர் சந்திக்கும் முதலாவது சந்தர்ப்பமாக இருக்கின்றது.

கட்சிக்குள் பிரதமர் ட்ரூடோ தலைமைப் பொறுப்பில் இருந்து விலக வேண்டும் என்கிற கருத்து நிலவி வருகின்ற நிலையிலேயே இந்த சந்திப்பு இடம்பெறுகின்றது.




# ரொறன்ரோ நகரில் களவுத் தொல்லை பொலிஸார் மக்களுக்கு எச்சரிக்கை!

கனடாவின் ரொறன்ரோ பொலிஸார், நகரில் களவுத் தொல்லை தொடர்பில் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா உள்ளிட்ட சில நிகழ்வுகள் நடைபெற்று வரும் நிலையில் கள்வர் தொல்லை குறித்து அவதானத்துடன் இருக்க வேண்டும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

பொதுமக்கள் பாதுகாப்பை கருத்தில் கொண்டு இந்த எச்சரிக்கை விடுக்கப்பட்டிருக்கின்றது.

பிக் பாக்கெட் முறையிலான திருட்டுச் சம்பவங்கள் இடம்பெறும் சாத்தியங்கள் அதிகமாக காணப்படுவதாக எச்சரிக்கை கூறப்பட்டுள்ளது.

ரொறன்ரோவின் பொழுதுபோக்கு மாவட்டத்தில் இந்த கொள்ளை சம்பவங்களுக்கான சாத்தியங்கள் அதிகம் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா, இசை நிகழ்ச்சிகள் போன்ற பல்வேறு கலை நிகழ்வுகளின் போது இவ்வாறு அபகரிப்புச் சம்பவங்கள் இடம்பெறலாம் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ரொறன்ரோ சர்வதேச திரைப்பட விழா நடைபெற்ற போது இவ்வாறான திருட்டுசம்பவங்கள்இடம்பெற்றமையைப் பொலிஸார் உறுதிப்படுத்தி உள்ளனர்.

மக்கள் திரளாக கூடும் இடங்களில் இவ்வாறு திருட்டு சம்பவங்கள் இடம் பெற சாத்தியம் அதிகம் எனவும் ஆகையினால் முக்கிய நிகழ்வுகளின் போது இவ்வாறான திருட்டு சம்பவங்கள் குறித்து மக்கள் அவதானத்துடன் செயல்பட வேண்டும் எனவும் கூறப்படுகின்றது.

# மாணவர் விசாவில் தீவிரவாதி நுழைந்தமையால் சர்வதேச மாணவர்களுக்கு கனடாவில் சிக்கல்!




கனடா அரசு ஏற்கனவே புலம்பெயர்ந்தோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்துவருகிறது.

இந்நிலையில், ஐ.எஸ். தீவிரவாதி என்று சந்தேகிக்கப்படும் ஒருவர் மாணவர் விசாவில் கனடாவுக்குள் நுழைந்த விவகாரம் சர்வதேச மாணவர்களுக்கு சிக்கலை அதிகரித்துள்ளது.

அமெரிக்காவின் நியூயார்க் நகரில் யூத மையம் மீது தாக்குதல் நடத்த திட்டமிட்டார் என்று கூறப்படும் முகமது ஷாசீப் கான் (வயது 20) என்னும் நபர் கியூபெக்கில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

அவர், 2023ஆம் ஆண்டு, மே மாதம், மாணவர் விசாவில் கனடாவுக்கு வந்தமை தெரியவந்துள்ளது.

கனடா அரசு ஏற்கனவே புலம்பெயர்ந்தோருக்கு எதிராக கடும் நடவடிக்கைகளை எடுத்துவரும் நிலையில், முகமது ஷாசீப் கான் மாணவர் விசாவில் கனடாவுக்கு வந்துள்ளமையால், சர்வதேச மாணவர்கள் மேலும் சிக்கலுக்கு ஆளாகியுள்ளார்கள்.

நாட்டில் புலம்பெயர்தல் எதிர்ப்பு அலை பரவிவரும் நிலையில், சர்வதேச மாணவர்களுக்கு ஆதரவளிக்க அரசியல்வாதிகள் யாரும் முன்வரவில்லை.

ஆக, சர்வதேச மாணவர்களுக்கு தற்போது மக்கள் ஆதரவும் இல்லை, அரசியல்வாதிகளின் ஆதரவும் இல்லை.

எனவே, வேறு வழியில்லாமல் மாணவர்கள் சிலர் சட்டவிரோதமாக அமெரிக்காவுக்குள் நுழையும் முயற்சியில் இறங்கியுள்ளார்கள்.

மற்றவர்களோ, கனடாவில் எப்படியாவது தொடர்ந்து தங்குவதற்காக கனடா பிரஜையைத் திருமணம் செய்வது போன்ற நடவடிக்கைகளிலும் இறங்கியுள்ளார்கள்




# ஒன்றாரியோவில் பாடசாலைகளில் வன்முறைச் சம்பவங்கள் அதிகரிப்பு

கனடாவின் ஒன்றாரியோ மாகாணத்தில் பாடசாலைகளில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்து வருவதாக கூறப்படுகின்றது.

ஒன்றாரியோ மாகாண கல்வி பணியாளர்களும் எதிர்க்கட்சியான என்.டி.பி கட்சியும் இது தொடர்பில் அதிருப்தி வெளியிட்டுள்ளனர்.

பாடசாலைகளில் இடம்பெற்று வரும் வன்முறை சம்பவங்களை தடுக்க நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

ஒன்றாரியோ ஆரம்ப பள்ளி ஆசிரியர்கள் ஒன்றியத்தைச் சேர்ந்த 77 வீதமான கல்விப் பணியாளர்கள் வன்முறைகளை சந்தித்தோ அல்லது வன்முறைகளை பார்வையிட்டோ உள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஆண்டு இவ்வாறான சம்பவங்கள் அதிகளவில் இடம் பெற்றுள்ளன எனவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த எட்டு ஆண்டுகளாக பாடசாலைகளில் வன்முறை சம்பவங்கள் அதிகரித்துள்ளன என்றும் சுட்டிக்காட்டப்படுகிறது.

பல்வேறு வழிகளில் துன்புறுத்துதல் போன்ற சம்பவங்கள் அதிக அளவில் இடம்பெற்று வருகின்றனவாம்.

உடல் ரீதியாகவும், உள ரீதியாகவும் துன்புறுத்தல்கள் மேற்கொள்ளப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரியர்களும் பள்ளிக்கூட பணியாளர்களும் இந்த சம்பவங்களினால் கூடுதலாக பாதிக்கப்பட்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

# சிறுவர்களைப் பயன்படுத்தி மேற்கொள்ளப்படும் மோசடி

கனடாவில் சிறுவர்களை பயன்படுத்தி மோசடி இடம் பெற்று வருவதாக பொலிஸார் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

டாக்ஸி கட்டண செலுத்துகை தொடர்பில் உதவி கோரும் போர்வையில் இவ்வாறு மோசடி இடம் பெறுகின்றது.

சிறுவர், சிறுமியர் அருகாமையில் இருப்பவர்களிடம் சென்று டாக்ஸி கட்டணத்தை செலுத்த உதவுமாறு கோருகின்றனர்.

அவ்வாறு உதவ முன்வருவோரிடம், அவர்களது டெபிட் அட்டைகள் மூலம் கட்டணத்தை செலுத்துமாறு கோருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

அட்டைக் கொடுப்னவு மூலம் இவ்வாறு உதவும் நபர்கள் பணத்தை இழக்க நேரிடுகின்றதாம்.

டாக்ஸி கட்டணமான சிறு தொகையை செலுத்துவதற்காக உதவி கோரும் போர்வையில் பெருந்தொகை பணத்தை டெபிட் அட்டைகளில் மோசடி செய்து விடுகின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

இவ்வாறான சில சந்தர்ப்பங்கள் பதிவாகியுள்ளன எனவும், பெரும்பாலும் சிறுவர்களைப் பயன்படுத்தியே இத்தகைய மோசடி முன்னெடுக்கப்பட்டு வருவதாகவுன் தெரிவிக்கப்படுகிறது.


சிறுவர்களுக்காக பரிதாபப்பட்டு உதவி செய்யும் போதும் அந்த உதவியை சிலர் துஷ்பிரயோகம் செய்து லாபமீட்டிக்கொள்கின்றனர் எனக் குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.




குயில்ப் பகுதியில், இவ்வாறு சிறுவர்களுக்காக பணம் செலுத்திய சிலர் மோசடியில் சிக்கி பணத்தை இழந்துள்ளனர் என தெரிவிக்கப்படுகிறது.

எனவே இந்த விவகாரம் தொடர்பில் மக்கள் அவதானத்துடன் இருக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

பொதுவாக வெள்ளை இனத்தைச் சேர்ந்த 11 முதல் 14 வயதான சிறுவர், சிறுமியர் இந்த மோசடிக்காக பயன்படுத்தப்படுகின்றனர் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.



# தொடர் இருமல் நோய்ப் பாதிப்பு கனடாவில் திடீரென அதிகரிப்பு

கனடாவின் நியூபவுண்ட்லான்ட் லப்ராடர் மாகாணத்தில் தொடர் இருமல் நோய்ப் பாதிப்பு அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கனடா முழுவதும் இந்த நோயாளர் எண்ணிக்கை அதிகரித்து வரும் அதே வேளை நியூபவுண்ட்லான்ட் லப்ராடர் மாகாணத்திலும் நோயாளரை எண்ணிக்கை அதிகரித்துச் செல்வதாக மாகாண பிரதம மருத்துவர் அதிகாரி தெரிவித்துள்ளார்.

மாகாண பிரதம மருத்துவ அதிகாரி டாக்டர் ஜெனிஸ் கிட்ஸ் கர்லின் இது தொடர்பில் தகவல் வெளியிட்டுள்ளார்.

இதுவரையில் மாகாணத்தில் சுமார் 230 பேர் இந்த நோயினால் பாதிக்கப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த நோய் தடுக்கக்கூடியது என அவர் தெரிவிக்கின்றார்.

கடந்த மாதம் கியுபெக் மாகாணத்தில் இந்த நோயினால் பாதிக்கப்பட்ட 11,000 பேர் பதிவாகி இருந்தனர். ஒன்றாரியோ மாகாணத்திலும் நோயாளர்கள் பதிவாகி இருந்தனர்.

நியூ பிரவுன்ஸ்விக் மாகாணத்திலும் இந்த தொடர் இருமல் நோயாளிகள் அதிக அளவில் பதிவாகி உள்ளனர்.

தடுப்பூசிகளை பெற்றுக் கொள்வதன் மூலம் இந்த நோய் பரவுவதனை தடுக்க முடியும் எனத்தெரிவிக்கப்படுகிறது.

அதிகளவில் சிறுவர்கள் இந்த நோயினால் பாதிக்கப்படுகின்றனர்

அமெரிக்காவிலும் இந்த நோய்த் தொற்றாளர் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

தொடர் இருமல் நோய் பரவுகை தொடர்பில் உன்னிப்பாக கண்காணிக்கப்பட்டு வருவதாக நியூ ஃபவுண்ட்லைன் மற்றும் லெப்ட்ராடர் மாகாண சுகாதார அதிகாரிகள்

# வாடகைக் கட்டணம் ஏற்றமும் இறக்கமும்!

கனடாவின் வாடகை தொகைத் தொடர்பில் புதிய அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

இந்த புதிய அறிக்கையின் பிரகாரம் பெரிய நகரங்களில் வாடகைத் தொகை குறைவடைந்துள்ள அதே வேளை சிறிய நகரங்களில் வாடகை தொகை அதிகரித்துள்ளது.

Rentals.ca and Urbanation நிறுவனங்களினால் இந்த அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

வான்கூவார் வாடகை சந்தையில் வாடகை தொகையானது ஆறு வீதத்தினால் குறைவடைந்துள்ளது.

தொடர்ச்சியாக ஒன்பதாவது மாத மாக வாடகை தொகையில் வீழ்ச்சி பதிவாகியுள்ளது. ரொறன்ரோ நகரின் வாடகை தொகை ஏழு வீதத்தினால் குறைவடைந்துள்ளது.




தொடர்ச்சியாக ஏழாவது மாதமாக இவ்வாறு வாடகை தொகை குறைவடைந்துள்ளது. ஒட்டாவா, மொன்றியால் போன்ற நகரங்களிலும் வாடகைத் தொகை குறைவடைந்துள்ளது.

இதேவேளை, சிறு நகரங்களில் வாடகை தொகை அதிகரிப்பு பதிவாகியுள்ளது. கியூபெக்சிட்டி நகரத்தில் வாடகை தொகை 22 வீத வாடகைத் தொகை அதிகரித்துள்ளது.

மேலும் சராசரி வாடகை தொகையானது கடந்த ஜூலை மாதத்துடன் ஒப்பீடு செய்யும் போது ஓகஸ்ட் மாதத்தில் சரிவினை சந்தித்துள்ளது.